செய்தி வெளியீடு எண். 116 நாள்: 24.02.2018

**தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் நடைபெற்றது**

திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் தனியார் துறையில் வேலைவாய்ப்பு முகாம், டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (நிகர் நிலை பல்கலைக்கழகம்) அடையாளம்பட்டு வளாகம், மதுரவாயல், சென்னை—யில் 24.02.2018 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 வரை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கான ஏற்பாடுகளை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும், டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராயச்சி நிறுவனமும் (நிகர் நிலை பல்கலைக்கழகம்) இணைந்து செய்திருந்தனர்.

. இம்முகாமில் SAMSUNG, SALCOMP, WIPRO, TVS GROUP, MARUTI SUZUKI GROUPS, GO TECH, UTL TECHNOLOGY, APPOLLO HOSPITAL உள்ளிட்ட 72 வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டனர். 1905 வேலைநாடுநர்கள் வருகை புரிந்தனர். இந்நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சென்னை மண்டல இணை இயக்குநர் திருமதி.வி.மீனாட்சி அவர்கள் திட்ட விளக்க உரையாற்றினார்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தனியார் நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்ட 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட 186 வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி விழா பேருரையாற்றினார்.

மேலும், இம்முகாமில் 452 வேலைநாடுநர்கள் அடுத்த நிலைக்கு தேர்வு பெற்றனர். இச்சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேசிய திறன் வளர்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக திறன் பயிற்சி பெற 130 மனுதாரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

வேலைவாய்ப்புத்துறையின் கீழ் இயங்கும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் 75 நபர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து கொண்டனர். இம்முகாம் கிராமப்புற இளைஞர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருந்ததென இதில் கலந்து கொண்ட இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இம்முகாமிற்கு வருகை புரிந்தவர்களை டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (நிகர் நிலை பல்கலைக்கழகம்) துணை புல தலைவர் முனைவர். திரு.எஸ்.மணிவண்ணன் அவர்கள் வரவேற்றார். நிகழ்ச்சியின் முடிவில் திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.வே.சீனிவாசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**